

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தே.மு.தி.க வேட்பாளர் அனகை டி. முருகேசன் அறிமுக கூட்டம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேட்பாளரை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்றினார். மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ வரவேற்புரை நிகழ்த்தினார் தொடர்ந்து மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் செயலாளர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். துணை மேயர் கோ. காமராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த. ஜெயக்குமா,ர் இ.எஸ்.பெர்னாா்ட், ஏ.கே. கருணாகரன், ஜி.கே.ரவி, அ.தமிழ்மாறன் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் கழகத் தோழர்கள் ஆகியோர் பெரும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்

### வேலூர் மாவட்டம் – காட்பாடி தொகுதி கிராமங்களில் தி.மு.க.வின்

# வாக்குறுதிகளை விளக்கி அமைச்சர் துரைமுருகன் வாக்குச் சேகரிப்பு!

## தேவாலயத்துக்குச் சென்று ஈஸ்டர் வாழ்த்துத் தெரிவித்தார்!

வேலூர், ஏப்.7-

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்களில் தி.மு.க.வின் வாக்குறுதிகளை விளக்கி கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். அங்குள்ள தேவாலயங்களுக்குச் சென்று ஈஸ்டர் வாழ்த்து தெரிவித்தார். காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் கழகப்பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் போட்டியிடுகிறார். அவர் காட்பாடி தொகுதிக்கு உட்பட்ட லாலாபேட்டை, நெல்லிக்குப்பம் பள்ளேரி, வசூர் ஏகாம்பரநல்லூர் மருதம்பாக்கம் உள்ளிட்ட 15க்கும் அதிகமான கிராம பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டார். தென்றல் நகர் பகுதியில் அவருக்கு கிராம மக்கள் மலர் தூவி ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது அமைச்சர் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் பேசியதாவது:

தி.மு.க.வின் ஐந்து ஆண்டு கால ஆட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பெண்களுக்கு வங்கியில் இருந்து திடீரென ஒரு நாள் ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக தகவல் வந்தபோது அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆயிரம் ரூபாயாக இருந்த மகளிர் உரிமைத் தொகையை 2000 ரூபாயாகவும், பெண் பிள்ளைகள் கல்லூரியில் படிக்கும் போது வழங்கப்படும் ஆயிரத்தை 1500 ரூபாய் ஆகவும் வழங்குவதற்கான அறிவிப்பை முதலமைச்சர் கொடுத்துள்ளார். 1500 ரூபாயாக வழங்கப்பட்ட முதியோர் பென்ஷன் தொகை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு ஒய்வூதியம் 2000 ஆக மாற்றப்படும். காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும் கரும்பு கொள்முதல் டன்னுக்கு ரூ.4000 ஆக உயர்த்தப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே உதயசூரியன் சின்னத்துக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும். மற்றவர்கள் அதை செய்வோம் இதை செய்வோம் என கூறுகின்றனர். தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் அனைத்திற்கும் உத்தரவு வழங்கி விட்டு தான் வாக்குச் சேகரிப்பதற்காக வந்திருக்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதைத் தொடர்ந்து சீக்கராஜபுரம் பகுதியில் உள்ள தேவாலயத்திற்கு சென்ற அமைச்சர் துரைமுருகனுக்கு தேவாலயத்தின் சார்பில்வரவேற்பு அளிக்கப்பட்டது. தேவாலயத்தில் பேசிய துரைமுருகன் அவர்கள் அனைவருக்கும் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அப்போது அவர் ஈஸ்டர் திருநாள் என்பது ஆண்டிற்கு ஒருமுறை நாம் நினைவு கூறும் வரலாற்று நிகழ்வு அல்ல அது உயிர் உள்ள ஒரு நம்பிக்கை என தெரிவித்தார்.

முன்னதாக காலை அவர் காட்பாடி காந்திநகர், விருதம்பட்டு, பர்னீஸ்புரம் காட்பாடி பகுதிகளில் உள்ள தேவாலயங்களுக்குச் சென்று ஆலய பாதிரியாளர்களை சந்தித்து ஆசிப் பெற்றார்.

அங்கு வந்த கிறிஸ்தவர்களுக்கு ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக் கூறி வாக்குச் சேகரித்தார். அப்போது அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அவர்கள் கூறினார்கள்.

சீக்கராஜபுரம் அருகே அக்ராவரத்தில் அவர் பிரச்சாரம் செய்த போது தேர்தலில் வெற்றி பெற வாழ்த்தி வேல் வழங்கப்பட்டது.

### சட்டமன்றத் தேர்தலில் வேறு எந்த அணிக்கும் போட்டியில்லை!

# தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும்தான் போட்டியே!


## உளுந்தூர்பேட்டை செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

உளுந்தூர்பேட்டை,ஏப். 7-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி தி.மு.க. கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (05.04.2026 ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. இக்கூட்டமானது தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் வைத்திய நாதன் வரவேற்றார்.

வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஆ. ஜெ. மணிக்கண்ணன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் வீரபாண்டியன், முன்னாள் ‘எம்.எல்.ஏ. திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த மாபெரும் செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேசிய போது,

தி.மு.க. சாதாரண தொண்டனுக்கும் வாய்ப்பு அளிக்கக் கூடிய கட்சி. அப்படி சாதாரண தொண்டன் தான் தி.மு.க. வேட்பாளர் வசந்தவேல் இந்த கூட்டணி சாதாரண கூட்டணி அல்ல, இது ஒருமெகா கூட்டணி, ஐந்தாண்டு கால ‘திராவிட மாடல்’ நல்லாட்சியின் சாதனைகள் எல்லாம் வாக்காளர்கள் மறந்து இருந்தாலும் அதனை அவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். உளுந்தூர்பேட்டை தொகுதி தி.மு.க. கூட்டணி வேட்பாளர் வசந்தவேல் சுமார் 75 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அமோகமாக வெற்றிபெற வேண்டும் அதற்கு அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும், மேலும் நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலை பொருத்தமட்டில் தமிழ்நாட்டிற்கும் டெல்லிக்கும் இடையே தான் போட்டியை தவிர வேறு எந்த அணிக்கும் போட்டியே கிடையாது ஆகவே திராவிட மாடல் நாயகர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர், தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதல்வராக தமிழ்நாட்டு மக்களின் அமோக ஆதர வுடன் பொறுப்பேற்பார் என பேசினார்.



முன்னதாக தி.மு.க. வேட்பாளர் வசந்தவேல், தி.மு.க. மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் ஆகியோர் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்த அரங்கில் உங்கள் பாதம் தொட்டு கேட்கிறோம். வசந்தவேலை எப்படியாவது வெற்றி பெற செய்ய வைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

இதில் ஒன்றிய செயலாளர்கள் ராஜவேல், முருகன், சந்திரசேகரன், தொகுதி பொறுப்பாளர் விஜயகுமார். ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர் செல்லையா, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் ஜெயசங்கர், ஒன்றியச் செயலாளர் அருள், சரண்ராஜ். சி.பி.எம். மாவட்டச் செயலாளர் ஜெய்சங்கர், காங்கிரஸ் மாநிலதுணைத் தலைவர் சீனுவாசன். சி.பி.ஐ. மாவட்டப் பொருளாளர் வெங்கடேசன், வி.சி.க. மாவட்டச் செயலாளர் அறிவுக்கரசு, நிர்வாகிகள் சேரன், அம்பேத், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் கருணாகரன், துணைச் செயலாளர் குழந்தைவேல், திருமால், அஷ்ரப்அலி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் முகம்மது அலி, தி.மு.க. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண்ராஜ், துணை அமைப்பாளர் பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் முருகவேல், மனோபாலன். குருராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் நகர கழக செயலாளர் டேனியல் ராஜ் நன்றி உரை கூறினார்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

## நாமக்கல், சேந்தமங்கலத்தில் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்குச் சேகரிப்பு!

நாமக்கல், ஏப். 7–


நாமக்கல் ஒன்றியம் – காதப்பள்ளி: நாமக்கல் ஒன்றியத்திற்குட்பட்ட காதப்பள்ளியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ப. ராணிக்கு ஆதரவாக தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்துகொண்டு ஒன்றிய பகுதிகளில் பொதுமக்களிடம் தீவிர வாக்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய கழக செயலாளர் வி.கே.பழனிவேல், கூட்டணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்குகள் கோரினர்.

அதேபோல் சேந்தமங்கலம் ஒன்றியம் – நரசிம்மன்காடு: சேந்தமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட உத்திரடிகாவல் ஊராட்சி நரசிம்மன்காட்டில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் பூமலர் பொன்னுசாமிக்கு ஆதரவாக க்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார்.

இதில் தேர்தல் ஒன்றிய கழக செயலாளர் அ. அசோக்குமார், மாவட்ட துணை செயலாளர் ராணி, பேரூர் கழக செயலாளர்கள் தனபாலன், முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் பாபு உள்ளிட்டோர் மற்றும் கூட்டணி நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

# பதற்றமும் பதக்கமும்!




**தோ**ல்வியை
தடுக்க
வழியே இல்லை
என்றதும்

தரமற்ற
பகைவர்கள்

கையில் எடுக்கிற
கடைசி
ஆயுதம்
அவதூறு ...

இதற்கு
சமகாலத்தில்

ஏகபோக
எடுத்துக்காட்டு
எடப்பாடி

ஆம்...

வாய்ப்பில்லை
என்றதும்

அன்னாரது
வாய்ச்சொல்
மொத்தமும்

வசைச்
சொல்லாய்
வழிகிறது.

தேர்ந்து
எடுக்காது
கூவத்தூரில்

ஊர்ந்து
எடுக்கப்பட்ட
குத்தகையே
ஆனாலும்

நாமும்
முதல்வராக
இருந்தோமே
என்கிற

முனையளவு
பக்குவமும்
இல்லாத

முச்சந்தி பேச்சாளராய்

பழனிசாமி
பண்பற்று
பேசுவது

முன் கூட்டிச்
சொல்கிறது...

”எங்கள்
முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்
தான்

சித்திரைத்
திங்களில்
செங்கோல்

ஏந்தப் போகும்

பைந்தமிழ்
பூமியின்
பதினேழாம்
முதலமைச்சர்
என்பதை. .

ஆம்...

பகையோரது
பதற்றம்
உணர்த்துகிறது

உதயசூரியனுக்கே
பதக்கம்
என்பதை

**என்னநாஞ்
சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*



சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் பகுதி அமைப்பாளர் சி.எச். தினேஷ் தலைமையில் 138 வது வட்டத்தில் உள்ள குறிஞ்சி தெரு, முல்லை தெரு, மருதம் தெரு, நெய்தல் தெரு, பாலை தெரு, தேவராஜி தெரு ஆகிய தெருகளில் கழக வெற்றி வேட்பாளர் ஏ.எம்.வி. பிரபாகரராஜாவை ஆதரித்து இளைஞரணி நிர்வாகிகளுடன் பொதுமக்களை சந்தித்து கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து வாக்குகள் சேகரித்தனர். இந்நிகழ்வில் அமுல்ராஜ், சீனு, நவீன், கோபி, ராஜமாணிக்கம், மணிகண்டன், அஜித், ரமேஷ், கிஷோர், தாமோதரன், சீனு ஆகியோர் உடன் இருந்தனர்.